DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 250 of 2022 |
| Deposition of witness for | : | PW11 |
| Name | : | அன்புச்செழியன் |
| Father's Name | : | K. அன்னவேல் |
| Village | : | மருதிப்பட்டி |
| Taluk | : | அரூர் |
| District | : | தர்மபுரி |
| Profession | : | MVI Grade I |
| Age | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 04th day of April 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.08.2020 அன்று பணியில் இருந்த போது துணை காவல் கண்காணிப்பாளர் கிருஷ்ணகிரி அவர்கள் வேண்டுகோளின் கடிதம் பெற்று குருபரப்பள்ளி காவல் நிலைய குற்ற எண்.751/2020 U/s.279,304A IPC @ 279,304A IPC வழக்கில் சம்பந்தப்பட்ட இலகு ரக சரக்கு வாகனம் TN 32 C 2476 என்ற வாகனத்தை அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த சேதங்கள் :

1. வலது புற முகப்பு விளக்கு உடைந்திருந்தது.
2. வலது புற முன்புற தடுப்பான் உட்புறமாக வளைந்திருந்தது.
3. வலது முன் புற சமிக்கை விளக்கு உடைந்திருந்தது.
4. வலது புறம் கதவு உட்புறமாக வளைந்திருந்தது.

வாகனத்தை இயக்கி பார்த்ததில் தடைத்திறன் 64 சதவீதமாக இருந்தது. விபத்தானது இயந்திர கோளாறினால் ஏற்பட்டதல்ல என சான்று வழங்கினேன். இதே வழக்கில் சம்பந்தப்பட்ட இரு சக்கர வாகனம் TN 24 AC 3409 என்ற வாகனத்தை அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன்.

வாகனத்தில் ஏற்பட்டிருந்த சேதாரங்கள் :
1. முகப்பு விளக்கு உடைந்திருந்தது.
2. இருசக்கர வாகனத்தின் Handle Bar வளைந்திருந்தது, தடைத்திறன் உடைந்திருந்தது.
3. வேகம் காட்டும் கருவி உடைந்திருந்தது.
4. முன்புற போர்க் பேனல் உடைந்திருந்தது, போர்க் வளைந்திருந்தது.
5. கால் வைப்பு (Foot rest) பின்புறமாக வளைந்திருந்தது.
அந்த வாகனம் இயக்கி பார்க்க முடியாத நிலையில் இருந்தது. விபத்தானது இயந்திர கோளாறினால் ஏற்பட்டதல்ல என்று சான்று வழங்கினேன்.
தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நான் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் ஆகும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அவை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக துணை காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

சம்பவ இடம் சென்று நீங்கள் வாகனத்தை ஆய்வு செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்து எத்தனை நாட்கள் கழித்து நீங்கள் வாகனங்களை ஆய்வு செய்தீர்கள் என்றால் 3 நாட்கள். இரு சக்கர வாகனத்திற்கு பதிவு சான்று, Insurance, தகுதிச் சான்று ஆகிய எதுவும் ஆஜர் படுத்தவில்லை என்றால் சரிதான். அந்த 3 நாட்கள் இடைவெளியில் விபத்தில் ஏற்பட்ட சேதங்களை சரிசெய்யவும் வாய்ப்புள்ளது என்று சொன்னால் பொதுவாக கிடையாது.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.